வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023
தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்
செலவுத் தலைப்பு இலக்கம் 311

5 ஆம் மாடி, 1 ஆம் கட்டம், செத்சிறிபாய,
பத்தரமுல்ல
தொலைபேசி இல. - 0112872054/0112887164
பெக்ஸ் இல. - 0112872061/0112872048
மின்னஞ்சல் - **info@nppd.gov.lk**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

உள்ளடக்கம்

01 அத்தியாயம் - நிறுவனத்தின் தோற்றப்பாடு /அமுல்படுத்துவதன் பொழிப்பு........................2

02. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு 7

03 அத்தியாயம் - 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை 17

04 அத்தியாயம் - செயலாற்றுகைக் சுட்டி..38

05 அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை..39

06. அத்தியாயம் - மனிதவளத் தோற்றப்பாடு 40

07. அத்தியாயம் - இயைபு அறிக்கை 42

1 அத்தியாயம் - நிறுவனத்தின் தோற்றப்பாடு /அமுல்படுத்துவதன் பொழிப்பு

1.1 அறிமுகம்

1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1947 ஆம் ஆண்டு நாடு, நகரத் திட்டமிடல் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இதனை அடுத்து துறைசார் அபிவிருத்தியும், பிரதேச அபிவிருத்தியும் கைகோர்த்துக் கொண்ட நிலைபேறான அபிவிருத்திச் செயன்முறையின் அவசியத்தன்மை எழுந்ததன் காரணமாக, அதற்குத் தீர்வாக தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாக தேசிய பௌதீக திட்டமொன்றை தயார் செய்வதை நோக்காகக் கொண்டு 2000 இன் 49 ஆம் இலக்க நாடு, நகர திட்டமிடல் திருத்தச் சட்டத்தின் மூலம் 2000 ஆம் ஆண்டில் இத்திணைக்களம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களமாக மீளமைக்கப்பட்டது.
அதற்கமைய, தேசிய திட்டமிடல் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட தேசிய பௌதீக திட்டத்தை தயார் செய்த பின்னர் அதற்கு இசைவாக இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் தனித்தனியாக அவ்வவ் மாகாணங்களின் சிக்கல்களை இனங்கண்டு, காணப்படுகின்ற வளங்களை உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு நிலைபேறான அபிவிருத்திக்கு வழிகாட்டலொன்றைப் பெற்றுக் கொடுக்க பிராந்திய பௌதீக திட்டங்களை தயார் செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது.
இலங்கையின் இருபத்து ஐந்து நிருவாக மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ள இயற்கை வளங்களை விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்திக் கொண்டும், இயற்கைச் சூழலை பாதுகாத்துக் கொண்டும், இயற்கை அனர்த்தங்களை குறைத்துக் கொள்ளும் வகையில் தகுந்த இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட நகர மற்றும் சேவை நிலையங்களைத் தாபிப்பதற்கு நகரங்களை திட்டமிடல், இலங்கைக்கு உகந்த புதிய நகரத் திட்டமிடலாளர்களை இனங்காணல், பொருளாதார அபிவிருத்தி வாய்ப்புக்களை உபாயமுறையில் பயன்படுத்திக் கொண்டு இலங்கைக்கு பொருத்தமான கைத்தொழில் பூங்கா மாதிரியமைப்பை இனங்காண்பதன் மூலம் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வது மேற்கொள்ளப்படுகின்றது.
இதற்கு மேலதிகமாக, இலங்கையின் பிரதான புனித பூமிகளின் முறையான அபிவிருத்திக்கான கட்டமைப்புசார் திட்டங்களை தயார் செய்வதும், இதற்கு இசைவாக கருத்திட்டங்களைத் தயார் செய்தல், மேற்படி கருத்திட்டங்களுக்கான கட்டிடக்கலைசார் மற்றும் பொறியியல்சார் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயார் செய்வதையும் மேற்கொண்டு இலங்கையின் சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.
மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றி இலங்கையில் திட்டமிடலில் ஈடுபட்டுள்ள பிரதான அரச நிறுவனம் என்ற வகையில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் இலங்கையின் அபிவிருத்திக்கு நிறைவேற்றியுள்ள மற்றும் நிறைவேற்றி வருகின்ற செயற்பணி அளப்பரியது.
இப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தேசிய பௌதீக திட்டடமிடல் திணைக்களத்தின் பிரதான பிரிவுகளான பிராந்திய திட்டமிடல் பிரிவு, பிரதேச பௌதீக திட்டமிடல் பிரிவு, ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மேற்படி பணிக்குப் பங்களிப்பு செய்யும் நிருவாகப் பிரிவு, கணக்குகள் பிரிவு, பொறியியல் பிரிவு, கட்டிடக் கலைப் பிரிவு ஆகிய பிரிவுகள் கூட்டாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றன.

1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

நோக்கு

“ நல்ல முறையில் திட்டமிடப்பட்ட நிலைபேறான மனங்கவர் நிலத்தின் முன்னோடி”

செயற்பணி

“ தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் உபாயமுறைகளை தயார் செய்தல் மற்றும் இலங்கையின் மற்றும் கடல் எல்லைக்கு உரித்தான பிரதேசங்களில் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றாடல்சார் துறைகளின் இணைந்த திட்டமொன்றை முறையாக ஏற்படுத்தல் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன், மாகாண மற்றும் பிரதேச திட்டங்களின் மூலம் மேற்படி தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்களை அமுல்படுத்துவதை உறுதி செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல்”

நோக்கங்கள்

1. இலங்கையின் திட்டமிடப்பட்ட நிலைபேறான மற்றும் மனங்கவர் பௌதீக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகள் மற்றும் திட்டங்களை தயார் செய்தல்.
2. இலங்கையில் மற்றும் கடல் எல்லைக்கு உரித்தான பிரதேசங்களில் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றாடல்சார் துறைகளில் இணைந்த திட்டமிடலில் ஈடுபடுதல்.
3. பௌதீக அபிவிருத்திகளை திட்டமிடுவதற்கு எந்தவொரு நிறுவனம் அல்லது அமைப்புக்கும் தேவையான ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தல்.
4. நம்பகமான மற்றும் விளைதிறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு திணைக்களத்தின் கொள்ளளவை அபிவிருத்தி செய்தல்.

1.3 பிரதான பணிகள்

i. தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கையை தயார் செய்தல்.
ii. தேசிய பௌதீக திட்டத்தை தயார் செய்தல்.
iii. பிராந்திய அல்லது பிரதேச பௌதீக திட்டமிடல் அதிகாரிகளினால் பின்பற்றுவதற்கென பௌதீக திட்டமிடல் முன்னோடி அறிவுரைகளை தயார் செய்தல்.
iv. பிராந்திய அல்லது பிரதேச பௌதீக திட்டமிடல் அதிகாரி யாதாயினுமொரு பிராந்திய அல்லது பிரதேச திட்டத்தை தயார் செய்ய முடியாது போன சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறான திட்டமொன்றை தயார் செய்யுமாறு குறித்த அதிகாரி கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவ்வாறான ஏதேனும் பிராந்திய அல்லது பிரதேச திட்டத்தை தயார் செய்தல்.
v. பிராந்திய பௌதீக திட்டத்தை தயார் செய்யும் போது மற்றும் அபிவிருத்தி செய்யும் போது மாகாண சபைகளுக்கு உதவுதல்.

vi. தேசிய பௌதீக திட்டமிடல் சபையிடம் சமர்ப்பிப்பதற்காக தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைக்கு இசைவாக அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சிபாரிசுகளை சமர்ப்பித்தல்.

vii. தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை, தேசிய பௌதீக திட்டம் மற்றும் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற தேசிய பௌதீக திட்டமிடல் உபாயமுறைகளை அடிக்கடி மீளாய்வு செய்தல் மற்றும் பரிசோதித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பத்தில், மேற்படி கொள்கை, திட்டமிடல் உபாயமுறைகளில் செய்ய வேண்டிய மாற்றங்களை ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சிபாரிசு செய்தல்.

viii. தேசிய பௌதீக திட்டமிடல் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய பௌதீக திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதை ஒழுங்குறுத்தல்.

ix. தேசிய பௌதீக திட்டமிடல் சபை மற்றும் அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவினால் நிறைவேற்றுமாறு கோரப்படக்கூடிய செயலகமொன்றின் பணியை நிறைவேற்றுவதும் உள்ளடங்களாக, சபையின் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் சகல செயற்பாடுகளின் பொதும் சபைக்கும், ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் உதவுதல்.

1.4 நிறுவன ஒழுங்கமைப்பு



1.5 தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியது.

2. பிராந்திய பௌதீக திட்டமிடல் பிரிவு
3. பிரதேச பௌதீக திட்டமிடல் பிரிவு
4. ஆராய்ச்சிப் பிரிவு
5. ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் பிரிவு
6. கட்டிடக்கலைப் பிரிவு
7. பொறியியல் பிரிவு
8. நிருவாகப் பிரிவு
9. கணக்குகள் பிரிவு
10. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

1.6 2023 ஆம் ஆண்டு தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு நிதி அமைச்சிடமிருந்து நிதி ஏற்பாடுகள் கிடைத்தன.

02. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

விசேட வெற்றிகள் - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

1. தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் 2000 இன் 49 ஆம் இலக்க நாடு, நகர திட்டமிடல் (திருத்த)ச் சட்டத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2019-2050 எனும் திட்டம் 2019 யூன் மாதம் 23 ஆம் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. இனை அடுத்து இது இற்றைப்படுத்தப்பட்டு தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2048 எனத் தயார் செய்யப்பட்டு சனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற தேசிய பௌதீக திட்டபிடல் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு திட்டத்திற்கு அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது.
    - தேசிய பௌதீக திட்டமிடல் பேரவையினால் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகளுக்கு அமைய பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



பருமட்டான உத்தேச இடஞ்சார்ந்த கட்டமைப்பு 2021-2048



- தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2021-2048 கௌரவ நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே திட்டமானது சகல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடமும் சமர்ப்பிக்கப்பட்டு பிரதேச அலுவலர்கள் மற்றும் அரசியல் தலைமைத்துவத்தையும் விழிப்புணர்வூட்டுமாறு அறிவுரை வழங்கப்பட்டது.
- அதற்கமைய, 2023 ஆம் ஆண்டில் கொழும்பு, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, மொனராகலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2021-2048 தொடர்பில் பிரதான சம்பந்தப்பட்ட தரப்பினர்களை விழிப்புணர்வூட்டல்.
- தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2021-2048 ஐ அமுல்படுத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் தலையீடு செய்யக்கூடிய முறை பற்றிக் கலந்துரையாடல்.
- தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2021-2048 ஐ அமுல்படுத்துவது தொடர்பாக நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல், விழிப்புணர்வூட்டல் மற்றும் அத்திட்டத்தின் 6 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டத்தை அமுல்படுத்தல்) முறையில் திட்டத்தை அமுலுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. 2000 இன் 49 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகர திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 5(ஏ), (டீ) மற்றும் 5(சீ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு உரித்தான விடயப்பொறுப்பு அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற பிரதேசங்களுக்கு வலயமயப்படுத்தல் திட்டங்களை தயார் செய்தல் வேண்டும். அதற்கமைய 2022 ஆம் ஆண்டு பின்வரும் மாகாணங்களுக்கு வலயமயமயமாக்கல் திட்டங்களை தயார் செய்வது ஆரம்பிக்கப்பட்டது.

    1. கிழக்கு மாகாணம்
    2. மத்திய மாகாணம்

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கிழக்கு மற்றும் மத்திய மாகாண பிராந்திய திட்டங்களில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- மத்திய மற்றும் கிழக்கு மாகாண பிராந்திய பௌதீக திட்டங்களை தயார் செய்வதற்கு மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் பிராந்திய அபிவிருத்திப் பிரதேசங்களாக விடயப்பொறுப்பு அமைச்சரினால் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டமை.
- பிராந்திய பௌதீக திட்டமிடல் குழுக்களை நியமனம் செய்தல்.
- மாகாண ஆளுனர்கள், பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் கூட்டங்களை நடாத்தல்.
- மாகாணத்தின் சகல நிறுவனங்களையும் விழிப்புணர்வூட்டும் ஒன்லையின் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தல்.
- பிராந்திய பௌதீக திட்டமிடல் குழுக்களை விழிப்புணர்வூட்டும் ஒன்லையின் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தல்.
- மாகாண தரப்பினர்களை முனைப்புடன் தொடர்புபடுத்திக் கொண்டு குழுக்கள் அடிப்படையில் செயலமர்வுகளை நடாத்தல்.

- மாகாணம் தொடர்பில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை தகவல்களை சேகரித்தல்
- வெளிக்கள தகவல்களை சேகரிப்பதற்கு குறித்த மாவட்டங்களில் வெளிக்கள பரிசோதனைகளை நடாத்தல்
- சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி பிராந்திய பௌதீக திட்டம் - 2035, 1ஆம் பகுதி (Central Province Regional Physical Plan-2035 Volume I and Eastern Province Regional Physical Plan-2035 Volume I) எனும் மத்திய மாகாண தரப் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் கிழக்கு மாகாணத்தின் தரப் பகுப்பாய்வு அறிக்கையை (Situation Analysis Report) தயார் செய்து அச்சிடல்.
- மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 2035, 11 ஆம் பகுதி (Central Province Regional Physical Plan –2035,Volume II) தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மேலதிகமாக கிழக்கு மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 2035, 11 ஆம் பகுதி (Eastern Province Regional Physical Plan – 2035,Volume II) தொடர்பில் பின்வரும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- சேகரிக்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் கிழக்கு மாகாண பௌதீக திட்டம் - 2035 இடஞ்சார்ந்த கட்டமைப்பு (Spatial Structure Plan-2035) திட்டத்தை தயார் செய்தல்.
- துறைசார் அபிவிருத்தி உபாயமுறைகளை (Sectoral Development Strategies) தயார் செய்தல்.
- அமுல்படுத்தும் கருத்திட்டங்களை (Action Projects) இனங்காணல்.
- மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 2035, 11 ஆம் பகுதி (Central Province Regional Physical Plan –2035,Volume II) அறிக்கையை தயார் செய்தல் மற்றும் அச்சிடல்.
- மேற்படி திட்டத்தை கிழக்கு மாகாண பிராந்திய திட்டமிடல் குழுவிடம் சமர்ப்பித்து கருத்துக்கள் பிரேரணைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதனை அடுத்து 2024 ஆம் ஆண்டில் தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. பிரதேச சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள நகரப் பிரதேசங்களை இனங்காணல் மற்றும் பிரகடனம் செய்தல்

உலகின் பல்வேறு நாடுகளும் பல்வேறு தகவுதிறன்கள் / சுட்டிகளைப் பயன்படுத்தி நகர்ப் பிரதேசங்கள் மற்றும் கிராமப் பிரதேசங்களை வகைப்படுத்துகின்றன. இன்று இலங்கையில் நகர்ப்புற பிரதேசங்களாக வகைப்படுத்தும் போது தகவுதிறன்கள் / சுட்டிகளாக நிருவாக ரீதியான அலகுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், உத்தியோகபூர்வமாக மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளின் பிரதேசங்கள் மாத்திரம் நகர்ப்புறப் பிரதேசங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இலங்கையின் நகரமயமாக்கலின் உண்மையான நிலைமையை வெளிப்படுத்தத் தவறியுள்ளது. இந்தத் தேவைப்பாடு பற்றி 1998 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி பற்றிய சனாதிபதி செயலணி மூலமும் சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், முறையாக அதற்கான கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், பல்வேறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் இது பற்றிய பல்வேறு கற்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் நகர மற்றும் கிராமிய பிரதேசங்களை வகைப்படுத்த வேண்டிய தீவிர அவசியத்தன்மை தற்போது காணப்படுவதுடன், மேற்படி வகைப்படுத்தலை மேற்கொள்வதன் மூலம் நகர அபிவிருத்தியை முறைப்படுத்த முடியும் என்பதுடன், இதன் திசைமுகப்படுத்தலை திட்டமிடுவதற்கும், எதிர்வுகூறுவதற்கும் இயலுமாகும்.

மேற்படி விடயத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு பிரதேச சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள நகர்ப்புற பிரதேசங்களை இனங்காணல் மற்றும் பிரகடனம் செய்தல் எனும் தலைப்பைக் கொண்டதாக அவி/21/2082/306/092 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய எமது திணைக்களத்தினால் பல்வேறு நிறுவனங்கள் ஊடாக அண்மையில் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சிகளையும் ஆராய்ந்துபார்த்து நகர்ப்புறப் பிரதேசங்கள் மற்றும் கிராமிய பிரதேசங்களை வகைப்படுத்துவதற்கு உகந்த தகவுதிறன்கள் இனங்காணப்படுவதுடன், மேற்படி தகவுதிறன்களுக்கு அங்கீகாரம் வழங்குவது ஆலோசனை சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

எமது திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டில் இந்தப் பணிக்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

I. தரவுப் பகுப்பாய்வின் மூலம் நகர மற்றும் நகர்ப்புறம் அல்லாத பிரதேசங்களை இனங்காண்பதற்கான வரைபடங்களை வடிவமைத்தல்.
II. சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பகுப்பாய்வு அறிக்கை மற்றும் வரைபடங்களை சமர்ப்பித்தல்.
    - கௌரவ நகர அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தக் கற்கையின் பெறுபேறுகளை சகல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடமும் சமர்ப்பித்து கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை பெற்றுக் கொள்ளுமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
    - அதற்கமைய, 2023 ஆம் ஆண்டில் கொழும்பு, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, மொனராகலை, கண்டி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடம் சமர்ப்பித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.

4. அநுராதபுரம் எத்துல்நுவர தொல்பொருளியல் பேணல் பிரதேசத்தில் வசிப்பவர்களை அப்பிரதேசத்திலிருந்து படிப்படியாக மீளக் குடியமர்த்தி எத்துல்நுவரவை தொல்பொருளியல் பேணல் பிரதேசமாக பிரகடனம் செய்வதன் மூலம் எத்துல்நுவர பிரதேசத்தில் தொல்பொருளியல் அகல்வுகளை மேற்கொள்ளல் மற்றும் பேணுவதற்கு வசதிகளை செய்துகொடுப்பதை நோக்காகக் கொண்டு அநுராதபுரம் லோலுகஸ்வெவ புதிய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

மேலும் இதன் மூலம் அநுராதபுரத்தில் சுற்றுலா மனங்கவர் தன்மையை மேம்படுத்தல் மற்றும் பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்துவது எதிர்பார்க்கப்படுவதுடன் மென்மேலும் சிறந்த வாழ்க்கைத் தரம் மற்றும் நகர வசதிகளை உறுதி செய்வதன் மூலம் **தொண்டர் அடிப்படையில் மீளக் குடியமர்த்தும் தேசிய கொள்கைக்கு (NIRP)** இணங்க எத்துல்நுவர வசிப்பாளர்களை மீளக்குடியமர்த்துவது நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

எத்துல்நுவர காணி கொள்ளல் செய்யும் பிரேரணை தொல்பொருளியல் திணைக்களத்தினால் காணிகள் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட முன்னர் எத்துல்நுவரவுக்கு **தொண்டர் அடிப்படையில் மீளக் குடியமர்த்தும் தேசிய கொள்கைக்கு (NIRP)** இணங்க மீள் குடியேற்றச் செயற்றிட்டத்தை தயார் செய்யுமாறு காணிகள் அமைச்சினால் ஆலோசனை வழங்கப்பட்டதுடன், பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற **" பாரியளவிலான கருத்திட்ட உபாயமுறைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல்"** குழவினாலும் மீள் குடியேற்றத்துக்கான செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.
தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு உரித்தான மீள் குடியேற்றச் செயற்றிட்டத்ததை தயார் செய்வதற்கு நிபுணத்துவ அறிவைக் கொண்ட அலுவலர்கள் இல்லை என்பதனால் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின்

அறிவுரைக்கு அமைய அதற்கென தனிநபர் ஆலோசகர்களை நியமனம் செய்யத் தேவையான பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது.
மேலும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் அறிவுரைக்கு அமைய நிதி அமைச்சின் விசேட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2023 ஆம் ஆண்டு நகர அபிவிருத்திப் பிரதேசங்களாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ள இடங்கள்					
மாகாணம்	**மாவட்டம்**		**புனித பூமி**	**வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி**	**வர்த்தமானப் பத்திரிகை இலக்கம்**
வடமேல்	புத்தளம்	01	திஸ்ஸவ ரஜமகா விஹாரை	2023.01.14	2314/81
வடமத்தி	பொலன்னறுவை	02	மஹசென் ரஜமகா விஹாரை	2023.01.14	2314/81
மேல்	கொழும்பு	03	பியகம சுதர்மாரா மகா விஹாரை	2023.01.24	2316/18
சபறகமுவா	இரத்தினபுரி	04	மெதகொட சித்த பத்தினி தேவாலயம்	2023.01.14	2314/83
கிழக்கு	திருகோணமலை	05	வரலாற்று முக்கியத்துவம்மிக்க வெல்கம வெஹெர ரஜமகா விஹாரை	2023.01.14	2314/83
மேல்	கொழும்பு	06	பெப்பிலியான சுனேத்ரா மஹாதேவி பிரிவெனா	2023.03.17	2323/13
வடமேல்	புத்தளம்	07	கிரிமெட்டியான சுதர்மாராமய	2023.04.11	2327/04
		08	பிலாகொட்டுமுல்ல ஶ்ரீ புஸ்மாரா புராண விஹாரை	2023.04.28	2029/45
மத்திய	கண்டி	09	மீகம்மன ரஜமகா விஹாரை	2023.07.27	2342/30
கிழக்கு	திருகோணமலை	10	யான்ஓயா ரஜமகா விஹாரை	2023.08.15	2345/39
		11	ஶ்ரீ சத்தம்ம யுக்திக்க வன சேனசுன	2023.08.15	2345/38

		12	அம்பாறை முகுது மஹா விஹாரை	2023.08.15	2345/37
		13	சாந்தி விஹாரை	2023.08.17	2345/52
		14	சாகரபுர சமுத்ரகிறி வன செனசுன	2023.08.17	2345/53
மேல்	கொழும்பு	15	கங்கொடவில் விஜயாராமய	2023.08.09	2344/21
வடமேல்	புத்தளம்	16	பொத்துவட்டவன மகா விஹாரை	2023.11.20	2359/05
	குருநாகல்	17	கபலேவ எம்பவ ஶ்ரீ சுதர்மாராமய	2023.12.22	2363/84
வட மத்தி	அநுராதபுரம்	18	அம்பகஸ்வெவ ரஜமகா விஹாரை	2023.12.22	2363/84
மேல்	கம்பஹா	19	மெத்தேகம ரஜமகா விஹாரை	2023.12.22	2363/84

அதற்கமைய, அரச நிதிகள் திணைக்களத்தினால் தனி ஆலோசகர்கள் 09 பேரை ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதற்கு 2023.08.07 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டது. செலவினத்தை குறைப்பதற்காக தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் தமக்குரித்தான தொழில்வல்லுனர்களைப் பயன்படுத்தி மீள் குடியேற்றும் செயற்றிட்டத்தை தயார் செய்வதற்கு அத்தியாவசியமான பின்வரும் தனிநபர் ஆலோசகர்களை வழிகாட்டலின் பிரிவு 4 இற்கு அமைய நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- சமுதாய அபிவிருத்தி நிபுணர் (1)
- மீள்குடியேற்ற நிபுணர் (1)
- வாழ்வாதார அபிவிருத்தி நிபுணர் (1)
- தரவுப் பகுப்பாய்வு நிபுணர் (1)
- பூகோள தகவல் முறைமை நிபுணர் (1)
- சமூக அலுவலர்கள் (4)

அதற்கமைய 2023.08.11 ஆம் திகதி தனிநபர் ஆலோசகர்களுக்கான பிரேரணைகள (RFP) கோரப்பட்டதுடன், அதற்கு போதியளவு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக 2023.09.21 ஆம் திகதி தனிநபர் ஆலோசகர்களுக்கு மீண்டும் பிரேரணைகள் (RFP) கோரப்பட்டன.

சமா்ப்பிக்கப்பட்ட தனிநபா் ஆலோசகா்களின் தொழில்நுட்பப் பிரேரணைகளை **(Technical Proposal)** மதிப்பீடு செய்த பின்னா் தெரிவு செய்யப்பட்ட ஆலோசகா்களின் நிதிசாா் பிரேரணைகள் **(Financial Proposal)** தொடா்பான நோ்முகப் பரீட்சை 2023.11.27 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், திணைக்கள பெறுகை குழுவினால் தகைமை பெற்ற தனிநபா் ஆலோசகா்களின் பெயா்ப் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5.1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகர திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)b மற்றும் 21(2) ஆம் பிரிவின் கீழ் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்குக் கிடைத்தள்ள தத்துவங்களுக்கு இசைவாக புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் தயாா் செய்யப்பட்டுள்ள தகவுதிறன்களை பூா்த்தி செய்கின்ற சமய வழிபாட்டுத்தளங்கள் மாத்திரம் புனித பூமிகளாக வா்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்யப்படும். அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் வா்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்யப்பட்ட சமய ரீதியான இடங்கள் பின்வருமாறாகும்.

6. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வா்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்பட்ட புனித பூமிகளுக்கு வா்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கு அமைய உருவரைப் பௌதீக திட்டம் தயாா் செய்யப்பட்டுள்ள புனித பூமிகள்.

   i. மாம்பிட்ட வலகம்பா புராண கல்லென் விஹாரை
   ii. வேரகல லெனகல ரஜமகா விஹாரை

7. தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் பின்வரும் கருத்திட்டங்களுக்கு கட்டிடக்கலை வரைபடம், கட்டமைப்புசாா் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாா் செய்துகொடுக்கப்பட்டன.

இடத்தின் பெயா்	**கருத்திட்டம்**
கப்பின்ன மஹா விஹாரை	அலுவலக கட்டிடத்தை நிா்மாணிக்க திட்டங்களை தயாா் செய்தல்
தம்பானை விஹாரை	ஆவாச இல்லம் தா்மப்போதனை மண்டபம் துப்பரவேற்பாட்டு கட்டிடம் தாதுக்கள் நிலையம் தியான நிலையம் பக்தா்களுக்கான ஓய்வு மண்டபம்
அசிரிகந்த ரஜமஹா விஹாரை	தியான நிலையத்தை நிா்மாணித்தல் துப்பரவேற்பாட்டு கட்டிடம் தங்குமிட அறைகளை நிா்மாணித்தல் பிக்குமாா் மற்றும் பிக்குணிகளுக்கான தங்குமிட அறை வசதிகள் பக்தா்களுக்கான அறை வசதிகள் துப்பரவேற்பாட்டு வசதிகள் சூரிய நமஸ்கார மேடையை நிா்மாணித்தல்
மத்திய தபால் பரிமாற்று நிலையம்	உள்ளக நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
புத்தசிராவக்க திரிபிட்டக தா்மபீடய தம்பதெனிய	புத்தசிராவக்க திரிபிட்டக தா்மபீடத்தை நிா்மாணித்தல்
மாலம்பே சைலாராம விஹாரை	பிக்குமாருக்கான விடுதிக் கட்டிடம் மற்றும் ஓய்வறையை நிா்மாணித்தல்
மத்திய தபால் பரிமாற்று நிலையம்	உள்ளக நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.2 எதிர்கால இலக்கு

2024 ஆம் ஆண்டில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

1. இந்த அறிக்கையின் IV ஆம் இலக்க விசேட வெற்றிகளின் கீழ் இலக்கம் 1 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பௌதீக திட்டமான 2021-2048 ஐ இற்றைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் போது 2024 ஆம் ஆண்டில்,
    1) சகல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடமும் சமர்ப்பித்தல்
       இதன் கீழ் சனவரி மாதம் கேகாலை, அநுராரபுரம், புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களின் மாவட்ட ஒருங்கணைப்புக் குழுக்களிடம் சமர்ப்பித்து முடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எஞ்சியுள்ள 15 மாவட்டங்களிலும் நிறைவு செய்யப்படவுள்ளன.
    2) இதனை அடுத்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
    3) இதனை அடுத்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
    4) வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்தல்
    5) சம்பந்தப்பட்ட தரப்பினர்களை விழிப்புணர்வூட்டல்

2. துரிதமாக முறையற்ற வகையில் அபிவிருத்தியடைந்து வருகின்ற குடியிருப்புக்களை கவனத்தில் கொண்டு முறையான அபிவிருத்திக்குரிய வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்கள் இரண்டுக்கும் பிராந்திய திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் மத்திய பிராந்திய பௌதீக திட்டத்தை தயார் செய்வது தொடர்பில் பின்வரும் பணிகள் நிறைவு செய்யப்படவுள்ளன.

- மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 2035, 11 ஆம் பகுதி (Central Province Regional Physical Plan –2035,Volume II) தயார் செய்வது தொடர்பாக,
    - சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 2035, இடஞ்சார் கட்டமைப்புத் திட்டத்தை (Spacial Structural Plan – 2035) தயார் செய்தல்.
    - துறைசார் அபிவிருத்தி உபாயமுறைகளை (Sectoral Development Strategies) தயார் செய்தல்
    - அமுல்படுத்தும் கருத்திட்டங்களை இனங்காணல்
- மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 2035, 11 ஆம் பகுதி (Central Province Regional Physical Plan –2035,Volume II) தயார் செய்தல் மற்றும் அச்சிடல்.
- சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டக் குழு, தொழில்நுட்ப ஆலோசனைக் குழு, அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழு மற்றும் தேசிய பௌதீக வடிவமைப்புப் பேரவை ஆகிய குழுக்களிடம் சமர்ப்பித்து உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் 2035, பகுதிய 11 ஐ வர்த்தமானப் பத்திரிகையில் பிரகடனம் செய்தல்.

கிழக்கு மாகாண பிராந்திய பௌதீக திட்டம் 2035, பகுதிய 11 ஐ தயார் செய்வது தொடர்பில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொழில்நுட்ப ஆலோசனைக் குழு, அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழு மற்றும் தேசிய

பௌதீக திட்டமிடல் பேரவை ஆகிய குழுக்களிடம் சமர்ப்பித்து தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல்.

- கிழக்கு மாகாண பிராந்திய பௌதீக திட்டம் 2035, பகுதிய 11 ஐ வர்த்தமானப் பத்திரிகையில் பிரகடனம் செய்தல்.

3. தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2021-2048 இல் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய சுற்றாடல் அதிஉணர்வு வலயத்திற்கான திட்டங்களை தயார் செய்வதை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
4. பிரதேச சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள நகர்ப்புறப் பிரதேசங்களை இனங்காணல் மற்றும் பிரகடனம் செய்தல்.
   மேற்படி ஆய்வு தொடர்பான நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், பின்வரும் பணிகளை 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
   i. ஆய்வின் பெறுபேறுகளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடம் சமர்ப்பித்து நிறைவு செய்தல்.
   இதன் கீழ் சனவரி மாதம் கேகாலை, அநுராதபுரம், புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்களிடம் சமர்ப்பித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய எஞ்சிய 15 மாட்டவங்களிலும் நிறைவு செய்யப்படவுள்ளன.
   ii. நகரமயமாக்கலுக்கான உத்தேச வரைவிலக்கணத்தை குழு ஊடாக நிறைவேற்றிக் கொள்ளல்.
   iii. ஆலோசனை சபையிடம் சமர்ப்பித்து உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
   iv. இனங்காணப்பட்ட பிரதேசங்களை வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்தல்.

5. அநுராதபுரம், எத்துல்நுவர தொல்பொருளியல் பேணல் பிரதேசத்திற்குள் வசிப்பவர்களை முறையாக மீளக் குடியமர்த்துவதற்கு லோலுகஸ்வெவ நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் மேற்படி கருத்திட்டத்தில் எத்துல்நுவர வசிப்பாளர்களை மீளக் குடியமர்த்துவதற்காக மீள்குடியேற்ற செயற்றிட்டத்தை தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
6. மேலே இலக்கம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2024 ஆம் ஆண்டில் வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்யப்படவுள்ள புனித பூமிகள் பின்வருமாறாகும்.
   1. ஸ்ரீ போதிருக்காராம விஹாரை
   2. வரகாகொட கல்லென் ரஜமகா விஹாரை, கம்பஹா
   3. ஹெய்யன்துடுவ புராண ரஜமகா விஹாரை திருகோணமலை
   4. கெகிராவ ஸ்ரீ தேவதிஸ்ஸ ரஜமகா விஹாரை
   5. கேஸ்தாராம ரஜமகா விஹாரை
   6. அத்துபந்தி கந்துருகோட்டே புராண ரஜமகா விஹாரை
   7. வெலிபிடமோதர ஸ்ரீ துபாராம ரஜமகா விஹாரை
   8. வெவுருகன்னல ரஜமகா விஹாரை
   9. அஸ்கிறிய புராண ரஜமகா விஹாரை
   10. புத்தியகம சிகால ரஜமகா விஹாரை

7. புனித பூமிகளின் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு கட்டிடக்கலை திட்டமிடல், பொறியியல் திட்டங்கள் மற்றும் விலைமதிப்பீடுகளை தயார் செய்தல்.
   1. ஒலபொட்டுவ ரஜமகா விஹாரையின் அபிவிருத்திப் பணிகள்
   2. தம்பதெனிய புத்த சிராவக்க திரிபிட்டக தம்ம பீடய அபிவிருத்திப் பணிகள்

3. அநுராதபுரம் மிரிசவெட்டிய பல்தேவைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் நில அழங்காரப்பணிகள்
4. தெதிகம கொட்டவெஹெர பன்சலை மற்றும் வீதிகள் மற்றும் சதரமகா தேவாலயத்தின் நிர்மாணப் பணிகள்

8. தற்போது தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் புனித பூமிகளாக வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிகடனம் செய்யப்படுவது நகர அபிவிருத்தி பிரதேசங்களாவேயாகும் என்பதுடன், அவற்றை புனித பூமிப் பிரதேசங்களாக பிரகடனம் செய்வதற்கு நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்தல்.
9. இதற்கு மேலதிகமாக வேறு நிறுவனங்கள் மற்றும் சமய வழிபாட்டுதல் தளங்களின் கோரிக்கைகளுக்கு அமைய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் கட்டிடக்கலை திட்டங்கள், கட்டமைப்புசார் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளை தயார் செய்து கொடுக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

டம்ல்யுடீ.எச்.ருச்சிர விதான

பணிப்பாளர் நாயகம்,

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்.

03 அத்தியாயம் - 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ACA - F

2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று					
			உண்மை		
திருத்திய பாதீடு 2023		குறிப்பு	2023	2022	
	வருமானம் பெறுகை	1			ACA-1
	வருமான வரி	2			
	உள்நாட்டு பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	3			
	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	4			
	வரியல்லாத வருமானம் மற்றும் வேறு				
	மொத்த வருமானம் பெறுகை (அ)				
	வருமானம் அல்லாத பெறுகை				
120,000,000	திறைசேரி கட்டுநிதி		170,562,000	177,301,000	ACA-3
1,000,000	வைப்புக்கள்		171,725	102,714	ACA-4
6,800,000	முற்பணக் கணக்குகள்		11,161,719	10,234,965	ACA-5
2,000,000	ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்குப் பெறுகைகள்		-	-	
129,800,000	**மொத்த வருமானம் அல்லாத பெறுகை (ஆ)**		181,895,444	187,638,679	
129,800,000	**மொத்த வருமானம் பெறுகை (அ) மற்றும் மொத்த வருமானம் அல்லாத பெறுகை இ = (அ) + (ஆ)**		181,895,444	187,638,679	
	தேறிய வருமானம் பெறுகை (அ) மற்றும் வருமானம் அல்லாத பெறுகை உ = (இ) + (ஈ)		181,895,444	187,638,679	
	குறைக்க செலவினம்				
	மீண்டெழும் செலவினம்				
127,250,000	சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய பயன்கள்	5	116,770,995	123,125,308	
64,193,100	ஏனைய பொருட்களும், சேவைகளும்	6	56,111,268	51,889,259	ACA-2(ii)
980,000	நிவாரணஉதவி, கொடை, மாற்றல்கள்	7	748,838	933,043	
-	வட்டி செலுத்தல்	8	-	-	
-	வேறு மீண்டெழும் செலவினம்	9	-	30,000	
192,423,100	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)**		173,631,101	175,977,610	
	மூலதன செலவினம்				
3,723,900	மூலதன சொத்துப் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	3,243,763	5,144,856	
800,000	மூலதன சொத்துக் கொள்வனவு	11	537,246	-	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ACA-2(ii)
-	நிதி மூலதன சொத்துக் கொள்வனவு	13	-	-	
1,000,000	திறன் விருத்தி	14	717,952	200,000	
200,300,000	வேறு மூலதன செலவினங்கள்	15	2,327,920	2,894,352	
205,823,900	**மொத்த மூலதன செலவினம் (ஈ)**		6,828,881	8,239,208	
	வைப்புக்களை செலுத்தல்		128,683	2,734,025	ACA-4
15,000,000	முற்பணம் செலுத்தல்		7,997,822	6,262,159	ACA-5
	ஏனைய பிரதான செலுத்தல்கள்		-		
15,000,000	**பிரதான செலுத்தல்கள் (உ)**		8,126,505	8,996,184	
	மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)		188,584,487	193,213,002	
	டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டுநிதி மீதி ஏ =(உ -எ)		(6,689,043)	(5,574,323)	
	சிறு காசு இணக்கக்கூற்றுக்கு அமைய மீதி		(6,689,043)	(5,574,323)	ACA-7
	டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சிறு காசு கட்டுநிதிக்கு அமைய மீதி		-	-	ACA-3

ACA-P

2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறாக

நிதி நிலைமை பற்றிய கூற்று

				உண்மை		
		குறிப்பு		**2023**		**2022**
		-	-	ரூபா		ரூபா
நிதி அல்லாத சொத்துக்கள்						
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்		ACA-6		254,453,030.00		211,330,784.00
நிதிச் சொத்துக்கள்						
முற்பணக் கணக்கு		ACA-5/5(A)		22,958,580.00		26,122,477.00
காசும், காசுக்கு சமமானவையும்		ACA-3		-		-
மொத்த சொத்துக்கள்				**277,411,610.00**		**237,453,261.00**
தேறிய சொத்துக்கள் ∴ உரிமையாண்மை						
தேறிய சொத்துக்கள்				22,876,337.00		26,083,276.00
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் இருப்பு				254,453,030.00		211,330,784.00
வாடகை மற்றும் வேலை முற்பணம்		**ACA-5(B)**				
நடைமுறைச் பொறுப்பு						
வைப்புக் கணக்கு		ACA-4		82,243.00		39,201.00
கட்டுநிதி நிலுவை		ACA-3		-		-
மொத்தப் பொறுப்புக்கள்				**277,411,610.00**		**237,453,261.00**

பக்க இல. 07 முதல் 24 வரையான மேற்படி ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப்படிவங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுத் தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் பக்க இல. 25 முதல் 42 வரை உள்ளடக்கும் கணக்கீட்டுக் குறிப்புக்களின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கும் பகுதிகளாகும். இந்த நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மென்மேலும் தகுந்த கணக்கீட்டுக் கொள்கை பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலே இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அதற்குரிய கணக்கீட்டுக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய கணக்கீட்டுத் தகவல்கள் திறைசேரியின் கணக்குப் பதிவேடுகளுடன் ஒப்பிடப்பட்டுள்ளன என்றும், அத்தொகைகளுடன் இணங்குகின்றன என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

கையொப்பம் தெளிவற்றது
பிரதம கணக்கீட்டு அலுவலர்
பெயர் :
பதவி : செயலாளர்
திகதி:

கையொப்பம் தெளிவற்றது
கணக்கீட்டு அலுவலர்
பெயர் :
பதவி : பணிப்பாளர் நாயகம்
திகதி:

கையொப்பம் தெளிவற்றது
பணிப்பாளர் நிதி
பெயர் :
திகதி: 2

ACA-C

2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான

காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022	2022
	ரூபா	ரூபா
<u>செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்</u>		-
மொத்த வரிப் பெறுகை	-	-
கட்டணம், மிகைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் உரிமப்பத்திரம்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகை		
வேறு தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	8,221,711	8,377,351
கட்டுநிதி பெறுகை	170,562,000	177,301,000
முற்பணம் பெறுகை	11,540,520	10,750,523
வைப்புப் பெறுகை	171,725	102,714
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மொத்தக் காசுப் பாய்ச்சல் (அ)	**190,495,956**	**196,531,588**
<u>குறைக்க – நிதி செலவிடல்</u>		
ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டுச் செலவினம்	172,725,263	181,229,216
நிவாரண உதவி மற்றும் மாற்றல்கள்	748,838	-
வேறு செலவுத் தலைப்புக்களுக்காக செய்யப்பட்ட செலவினம்	1,356,349	3,568,670
திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி	-	-
முற்பணம் செலுத்தல்	8,709,943	6,204,950
வைப்புக்களை செலுத்தல்	128,683	2,734,025
செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவிடப்படும் காசுப் பாய்ச்சல் (ஆ)	**183,669,076**	**193,736,861**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (இ) =(அ) – (ஆ)	**6,826,880**	**2,794,727**
<u>முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
வட்டி	-	-
இலாபப் பகிர்வு	-	-
உரித்து நீங்கும் ஏற்பாடு மற்றும் சொத்துக்களை விற்பனை செய்தல்	-	99,625
கடன் அறவிட்டுக் கொள்ளல்	-	

முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (ஈ)	-	**99,625**
குறைக்க – நிதி செலவிடல்		
பௌதீக சொத்து நிர்மாணிப்பு அல்லது கொள்வனவு மற்றும் வேறு முதலீடுகளை கொள்ளல்	6,826,880	2,894,352
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு செலவிடப்பட்ட மொத்தக் காசுப்பாய்ச்சல் (உ)	6,826,880	2,894,352
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் **(ஊ)= (ஈ) – (உ)**	**(6,826,880)**	**(2,794,727)**
செயற்பாட்டு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் (எ) = (இ) – (ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர் கடன் பெறுகை	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுகை	-	-
கொடைகள் பெறுகை	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஏ)		
குறைக்க – நிதி செலவிடல்		
உள்ளூர் கடன் மீளச் செலுத்தல்	-	-
வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்தல்	-	-
வைப்புக்களை மீளச் செலுத்தல்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு செலவிடப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஐ)		
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மொத்த காசுப் பாய்ச்சல் (ஒ) = (ஏ) – (ஐ)	-	-
காசு தேறிய மாற்றங்கள் (ஓ) = (எ) – (ஓ)	-	-
சனவரி 01 ஆம் திகதிக்கு ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31 ஆம் திகதிக்கு காசு மீதி	-	-

3.2 **நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

<u>அறிக்கையிடுவதன் அடிப்படை</u>

1) அறிக்கையிடும் காலஎல்லை
2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதி இந்த நிதிக் கூற்றுக்களுக்குரிய அறிக்கையிடல் காலஎல்லையாகும்.

2) கணிப்பிடும் அடிப்படை
நிதிக் கூற்றுகள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு சில சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வேறு வகையில் குறிப்பிடப்படாத பட்சத்தில் கணக்குகளை தயார் செய்வதானது மேம்படுத்தப்பட்ட நிதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.
நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவின் அண்மித்த ரூபாவில் தரப்பட்டுள்ளது.

3) வருமானங்களை இனங்காணல்
பரிமாற்றல் மற்றும் பரிமாற்றம் செய்யப்படாத வருமானங்கள் அவை கிடைக்க வேண்டிய காலப்பகுதியில் வருமானமாக இனங்காணப்படுகின்றன.

4) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்காணல் மற்றும் கணிப்பிடல்
சொத்து தொடர்பிலான எதிர்கால பொருளாதார பயன்கள் நிறுவனத்திற்குக் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ள போது மற்றும் மேற்படி சொத்துக்களின் நம்பகத்தன்மையை அளவிட முடியுமெனின் மேற்படி சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக இனங்காணப்படும்.
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் செலவினத்தில் இனங்காணப்படுவதுடன், செலவின மாதிரியமைப்பு ஏற்புடையதல்லாத சந்தர்ப்பங்களில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பயன்படுத்திக் கொள்ளப்படும்.

5) ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கம்
இந்த ஒதுக்கக் கணக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் இசைவுக் கணக்காகும்.

3.3 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டு விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமானம், மதிப்பீட்டின் விகிதமாக %
-	-	-	-	-	-

3.4 **ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை**

ஏற்பாடுகளின் வகை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடு		உண்மை செலவினம்	பயன்படுத்திக் கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்ட ஏற்பாடுகளின் விகிதமாக %
	நிதி ஏற்பாடு	இறுதி ஏற்பாடு		
மீண்டெழும்	192,426,100.00	192,426,100.00	173,631,101.00	90%
மூலதனம்	205,410,000.00	205,823,900.00	6,826,881.00	3.2%

3.5 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு - இல்லை

தொடர் இல	அமைச்சு/ திணைக்களத் திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
-	-	-	-	-	-	-

3.6 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

ஆதனக் குறியீடு	குறியீட்டு விபரம்	2022312.31 ஆம் திகதிக்கு பொருட் கணிப்பீட்டு அறிக்கைக்கு அமைய மீதி	2023.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்றுக்கு அமைய மீதி	எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்படுத்தப்பட உள்ளது	முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல்
9151	கட்டிடமும், கட்டமைப்புக்களும்	-	66,200,000.00	-	
9152	இயந்திரசாதனம்	-	105,712,630.27	-	
9153	காணி	-	82,150,000.00	-	
9154	அருவைச் சொத்துக்கள்	-	390,400.00	-	
9155	உயிரியல்சார் சொத்துக்கள்	-	-	-	
9160	மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகள்	-	-	-	
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	-	-	-	
				-	

3.7 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. எச்யுடி/ஏ/என்பீடி/02/23/09 திகதி : 2024 மே மாதம் 22 ஆம் திகதி

கணக்கீட்டு அலுவலர்,
தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்.

தலைப்பு – 311 - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்கு அமைய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை

தலைப்பு – 311 தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பில் உள்ளடங்கும் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்கு அமைய இந்த அறிக்கை வெளியிடப்படுவதுடன், பிரதம கணக்கீட்டு அலுவலரினால் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 39 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த அறிக்கையிலுள்ள திகதி முதல் 03 மாத காலப்பகுதிக்குள் பிரேரிக்கப்படுகின்ற பரிகார நடவடிக்கைகள் அல்லது கவனத்தில் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி எனக்கு அறிக்கையிடுதல் வேண்டும். இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள யாதாயினுமொரு நடவடிக்கை அல்லது விடயம் தொடர்பில் அமுல்படுத்துதல் அல்லது முடியாமைக்கான காரணங்கள் இருப்பின் அது பற்றி எனக்கு அறியப்படுத்தல் வேண்டும்.

1.2 நிதிக் கூற்றுக்கள் பற்றிய அபிப்பிராயம்

1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ)	**மீண்டெழும் செலவினம்**		
	நிதிக் கூற்றுக்களுடன் சம்பந்தப்பட்ட மீண்டெழும் செலவினங்களை கணக்குகளில் பதிவு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிப்புச் செய்யப்பட்டன.		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
	திணைக்களத்தினால் வாகனங்களை புதுப்பிப்பதற்கு 02 சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,082,900 ஆன மீண்டெழும் செலவினம் செலவின தலைப்பு இலக்கம் 311-1-1-0-1301 இன் கீழ் தாங்கிக் கொள்ளப்பட வேண்டும் எனினும், மேற்படி செலவினம் மூலதன செலவு விடய இலக்கம் 311-1-1-0-2003 இன் கீழ் செலவிடப்பட்டு கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மீண்டெழும் செலவினம் ரூபா 1,082,900 இனால் குறைவாக மற்றும் மூலதன செலவினம் அத்தொகையினால் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளமை.	மூலதன செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்குகளில் பதிவு செய்தல் வேண்டும்.	வாகனங்களை சேவையில் ஈடுபடுத்தத் தேவையான உதிரி பாகங்களை பயன்படுத்துவற்கு செலவிடப்பட்டுள்ளதனால் செலவு விடய இலக்கம் 2003 மூலதன செலவு விடயத்திலிருந்து செலவிடப்பட்டுள்ளது.
(ஆ)	**அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு**		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
(i)	அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகதின் 262/2017 ஆம் இலக்கம் மற்றும் 2017 டிசம்பர் 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவுக்கு அமைய 2018 இன் பின்னர் ஓய்வு அல்லது உயிரிழந்துள்ள அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய எந்தவொரு கடன் தொகையையும் முற்பண பீ கணக்கில் குறிப்பிடாதிருக்க நிறுவனத் தலைவர்கள் பொறுப்புடன் செயற்படல் வேண்டும் எனினும், திணைக்களத்தில் உயிரிழந்த மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள் 04 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 610,772 ஆன தொகையை அறவிட்டுக்	சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

	கொள்ளாது முற்பண பீ கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளமை.		
(ii)	திணைக்களத்தின் சாரதி ஒருவர் 2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி பதவி வெறிதாக்கியுள்ளார். அந்த சந்தர்ப்பத்தில் இடர் கடனாக ரூபா 172,175 அரசுக்கு அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வு செய்த திகதிவரை 05 வருடங்கள் கடந்திருந்தது. மேற்படி தொகையை தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்திற்கு அமைய மீள அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	துரிதமாக அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.	அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(iii)	திணைக்களத்தின் பொலன்னறுவை புலதிசிபுர சுற்றுலா விடுதியின் பொறுப்பாளர் 2019 செப்தெம்பர் 10 ஆம் திகதி நிதி முறைகேடு காரணமாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதுடன் அவரிடமிருந்து அச்சந்தர்ப்பத்தில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 183,840 ஆன தொகை 2024 மே 15 ஆம் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	துரிதமாக அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.	வெளிநாடு சென்றுள்ள பிணையாளருக்கும் குறித்த தொகையை தீர்த்து வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ) **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை கணக்குகளில் பதிவு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிப்புச் செய்யப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	சிபாரிசு	கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை
	2022 டிசம்பர் மாதம் 13 ஆம் திகதிய அரசாங்க கணக்குகள் வழிகாட்டல் 2022/05 இன் 8.2 இற்கமைய நிதியல்லாத சொத்துக்களை முறையாக இனங்கண்டு கணக்குகளில் பதிவு செய்தல் வேண்டுமாயினும் திணைக்களத்திற்கு ஆட்சியுரிமை உள்ள 06 காணிகள் மற்றும் 04 கட்டிடங்களின் உரித்தை சாட்டுதல் செய்துகொண்டு பெறுமதியை விலைமதிப்புச் செய்து கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	துரிதமாக நில அளவையாளர் அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டு விலைமதிப்புச் செய்து கணக்குகளில் பதிவு செய்தல் வேண்டும்.	உரித்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உரித்துப் பெறப்பட்ட பின்னர் விலைமதிப்புச் செய்யப்படும்.

(ஈ)	**சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாமை.** மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிப்புச் செய்யப்பட்ட சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை பற்றிய சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.				
	அவதானிப்பு				
	சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு	**பெறு மதி ரூபா**	**இணங்கியொழுகாமை**	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
(i)	அரச நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 18/2001 ஆம் இலக்க 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய சுற்றறிக்கை		ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடமையாற்றிய பின்னர் அலுவலர்களின் இடமாற்றங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதன் காரணமாக உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் சேவையாற்றியுள்ள அலுவலர்கள் 12 பேர் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சட்டங்கள், விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	2023 வருடாந்த இடமாற்றலுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட அலுவலர்களின் பட்டியல் அரச நிருவாக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.
(ii)	அரச நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 02/2018 ஆம் இலக்க 2018 சனவரி 24 ஆம் திகதிய சுற்றறிக்கை		சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவுக்கு அமைய பதவியணியில் காணப்படுகின்ற மற்றும் காணப்படுகின்ற திறமைசார் இடைவெளிகளை இனங்காண்பதற்கு மனிதவள அபிவிருத்தி திட்டத்தை தயார் செய்தல் வேண்டும். மேலும் சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவுக்கு அமைய ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடாந்தம் குறைந்த பட்சம் 12 மணித்தியாலத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் மேற்படி மனிதவள அபிவிருத்தி திட்டத்தை தயார் செய்தல் வேண்டும். அவ்வாறாயினும் திணைக்களம் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.	சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	2023/2024 மனித வள அபிவிருத்தித் திட்டம் தயார் செய்யப்பட்டு பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

2.	**நிதிசார் மீளாய்வு**		
2.1	**வருமான முகாமைத்துவம்**		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
	பொலன்னறுவை புலதிசிபுர உல்லா விடுதியில் தங்கியிருப்பது தொடர்பில் 3 – 5 வருட காலமாக சனாதிபதி செயலகத்திடமிருந்து, திணைக்களத்திற்கு ரூபா 340,200 அறவிடப்பட வேண்டியுள்ள போதிலும், மேற்படி தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை தொகைகளை துரிதமாக அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	சனாதிபதி செயலகத்திடம் எழுத்து மூலமான உறுதிப்படுத்தல் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவென அறிவுரை கோரப்பட்டுள்ளது.
2.2	**செலவின முகாமைத்துவம்**		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
(அ)	திணைக்களத்தினால் மீளாய்வு ஆண்டில் 08 செலவு விடயங்கள் தொடர்பாக வேறு செலவு விடயங்களிலிருந்து ரூபா 11,146,260 மாற்றல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆரம்ப மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 2 சதவீதத்திற்கும் 153 சதவீதத்திற்கும் இடைப்படதாக இத்தொகைகள் காணப்படுகின்றன. செலவினங்களை சரியாக இனங்கண்டு மதிப்பீடு செய்யாமை இந்நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளது.	மதிப்பீடுகளை தயார் செய்யும் போது ஏற்படக்கூடிய எதிர்கால நிலைமைகளை எதிர்வுகூறி மதிப்பீடுகளை தயார் செய்தல் வேண்டும்.	மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் கிடைக்காமை மற்றும் திருத்திய வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் குறைக்கப்பட்டமை மற்றும் எதிர்பாராத செலவினங்கள் ஏற்பட்டதன் காரணமாக செலவு விடயங்களுக்கு இடையே மாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன
(ஆ)	மூலதன செலவுத் தலைப்பு இலக்கம் 311-1-1-1-2506(11) இன் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 195,245,000 ஆன தொகையில் 100 சதவீதமும் அபிவிருத்திக்காக செலவிடப்படாது ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்தது. முறையான திட்டமொன்றுக்கு அமைய தேவையான ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளாமை இந்த நிலைமைக்கு நேரடியாக காரணமாக	எதிர்கால நிலைமைகள் பற்றிய போதியளவிலான கற்கையினை மேற்கொண்டு முறையான திட்டத்திற்கு அமைய	காணப்பட்ட உறுதியற்ற நிலைமை காரணமாக பௌதீக திட்டங்களை தயார் செய்யும் நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் காரணமாக ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளமை.

	அமைந்துள்ளது.	ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	
(இ)	நிதிப் பிரமாணம் 66(1) இற்கமைய செலவு விடயத்திற்கு நிதி ஏற்பாடுகள் போதியதாக இல்லாத போது வேறு செலவு விடயம் ஒன்றில் எஞ்சியுள்ள சேமிப்பு மூலம் குறித்த செலவினத்தை ஈடுசெய்துகொள்ள பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு 04 செலவு விடயங்களுக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 5,594,961 ஆன தொகை மேலும் செலவிடப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. இது 5 முதல் 54 சதவீதம் வரையாக காணப்பட்டது.	ஏற்படக்கூடிய செலவினங்களுக்கு மாத்திரம் ஏற்பாடுகளை மாற்றல் செய்தல் வேண்டும்.	தொழிலில் இருந்து பதவி விலகுதல், ஆட்சேர்ப்புச் செய்வது தாமதமடைதல், மதிப்பீடு செய்யப்பட்டவாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமை காரணமாக சேமிப்பு இடம்பெற்றுள்ளது.

2.3	**பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்**		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
	2023 ஆம் ஆண்டு தொடர்பாக 2024 ஆ் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 465,164 ஆன பொறுப்புக்கள் மீளாய்வு ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்குகளில் பதிவு செய்தல் வேண்டும்.	2024 சனவரி 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டுக்குரிய செலவினங்கள் உட்புகுத்தப்பட்டுள்ளன.
3.	**செயற்பாட்டு மீளாய்வு**		
3.1	**நோக்கு மற்றும் செயற்பணி**		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
	தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நோக்கு, நல்ல முறையில் திட்டமிடப்பட்ட பாதுகாப்பான நிலம் என்பதாகும் என்பதுடன், செயற்பணியாக இருப்பது தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் உபாயமுறைகளை	திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு	இந்தப் பதவியணியை புத்தசாசன அமைச்சுக்கு இணைப்புச் செய்யுமாறு கோரி மேற்படி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அது நிராகரிக்கப்பட்டது. இது

	தயார் செய்தல் மற்றும் இலங்கையின் மற்றும் கடல் எல்லைக்கு உரித்தான பிரதேசங்களில் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றாடல்சார் துறைகளின் இணைந்த திட்டமொன்றை முறையாக ஏற்படுத்தல் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன், மாகாண மற்றும் பிரதேச திட்டங்களின் மூலம் மேற்படி தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்களை அமுல்படுத்துவதை உறுதி செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பதாகும். அவ்வாறாயினும் செயற்பணிக்குப் புறம்பாக புனித பூமிகளை சுத்தம் செய்வதற்கு மற்றும் வேறு நடவடிக்கைளுக்கு திணைக்களத்தின் ஊழியர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இதற்கு நாடு, நகர திட்டமிடல் சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லை என்பதுடன், பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இத்திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றமை அவதானிப்புச் செய்யப்பட்டது.	த் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள திணைக்களத்தின் ஏற்பாடுகளை செலவிடல் வேண்டும்.	தொடர்பாக நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் புத்தசாசன, சமய, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்படல் வேண்டும்.

3.2	**செயற்பணிகளை நிறைவேற்றாமை** பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
(அ)	1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகர திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் (269 ஆம் அத்தியாயம்) மற்றும் 2000 இன் 49 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் (திருத்த)ச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுக்கு இணங்க தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகளை தயார் செய்தல் மற்றும் தேசிய பௌதீக திட்டத்தை	சட்டத்தின் 07 ஆம் பிரிவுக்கு அமைய தேசிய பௌதீக திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் நாட்டினுள்	2022 சனவரி தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் மற்றும் திட்டத்தின் திருத்தங்கள்

	தயார் செய்து 2021 அக்டோபர் 31 ஆம் திகதியளவில் நிறைவு செய்தல் வேண்டுமாயினும், 2019 இல் தயார் செய்யப்பட்டிருந்த தேசிய பௌதீக திட்டத்தின் திருத்தங்கள் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள போதும், 15 மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை மாத்தரம் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், தேவையான விழிப்புணர்வூட்டலை தொடர்ச்சியாக மேற்கொண்டு வர்த்தமானியில் வெளியிட்டு பௌதீக திட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	மேற்கொள்ளப்படுகின்ற பௌதீக நிர்மாணிப்புக்கள் இதற்கு இசைவாக மேற்கொள்ளப்படுகின்றதா மற்றும் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் திணைக்களம் அது பற்றி பிரகடனம் செய்தல் வேண்டும்.	தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன.
(ஆ)	அநுராதபுரம் புனிதபூமியில் குடியிருப்புக்கள் விரிவடைவதை மட்டுப்படுத்தல் மற்றும் சட்டவிரோத நிர்மாணிப்புக்களை அகற்றுவதற்கு லொலுகஸ்வெவ நகரத் திட்டமிடல் கருத்திட்டம் 2017 இல் ஆரம்பிக்கப்பட்டு 2023 வரை ரூ.மி. 1033 ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், இதில் ரூ.மி. 13.4 அதாவது சுமார் 1 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டுள்ளதுடன், கருத்திட்ட அலுவலகம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 07 வருடங்கள் கடந்துள்ள போதும், உத்தேச நோக்கத்தை அடைந்துகொள்ள முடியாது போயுள்ளதுடன், மீள்குடியேற்ற செயற்றிட்டத்தை தயார் செய்வதற்கு அரச நிறுவனங்கள் 04 இலிருந்து ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்துகெள்ள தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் அந்நடவடிக்கைகள் இடையில் கைவிடப்பட்டுள்ளது.	திணைக்களத்தின் விடயப்பரப்புக்கு ஏற்புடையதாகாத பணியாக இருப்பதனால் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை விழிப்புணர்வூட்டி கருத்திட்டத்தை மேற்கொள்ளக்கூடிய நிறுவனமொன்றிடம் சாட்டுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	காணி அமைச்சினால் மீள்குடியேற்றச் செயற்றிட்டமொன்று கோரப்பட்டுள்ளது. இதனை தயார் செய்வதற்கு ஆலோசகர்களை விடுவிப்பது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி செயற்றிட்டம் தயார் செய்யப்பட்ட பின்னர் அடுத்த கட்டப் பணிகள் தீர்மானிக்கப்படும்.
(இ)	2023 ஆம் ஆண்டில் மத்திய, ஊவா, கிழக்கு ஆகிய 3 மாகாணங்களுக்கும் பிராந்திய பௌதீக திட்டங்களை தயார் செய்யத்	திட்டமிடப்பட்டவாறு பௌதீக திட்டங்களை தயார் செய்து	பதவியணியின் பற்றாக்குறை காரணமாக

	திட்டமிட்டிருந்த போதிலும்,2023 ஆம் ஆண்டின் இறுதி வரை எந்தவொரு திட்டத்தின் வேலையையும் நிறைவு செய்திருக்கவில்லை என்பதுடன், மத்திய மாகாணத்தின் உணர்வுப்பூர்வமான சூழலுக்கு அறிவுரைத் தொகுப்பொன்றை தயார் செய்யத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதனையும் மேற்கொண்டிருக்கவில்லை. முகாமைத்துவத்தின் பலவீனமான கண்காணிப்பு இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. இதன் காரணமாக இவ்வாறு திட்டமொன்று இன்றி பொருத்தமற்ற நிர்மாணிப்புக்கள் மற்றும் பொது வசதிகள் முறையாக இல்லாமை சுற்றாடல்சார் சிக்கல்கள் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது.	சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	இந்தத் திட்டங்களை தயார் செய்வதை திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியவில்லை.
(ஈ)	புனித பூமியாக பிரகடனம் செய்வதற்கு புனித பூமியாக கருதப்படுகின்ற பிரதேசத்தில் வெளிக்களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவசியமானதெனக் கருதும் தகவுதிறன்களை பூர்த்தி செய்திருப்பின் வர்த்தமானப் பத்திரிகை மூலம் புனித பூமிப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்படும். மீளாய்வு ஆண்டில் 38 விஹாரைகளை புனித பூமிப் பிரதேசங்களாக பிரகடனம் செய்யவும், அபிவிருத்தி செய்யவும் மற்றும் திட்டங்களை தயார் செய்யவும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் ஆண்டினுள் மேற்படி விஹாரைகளை வர்த்தமானப் பத்திரிகை மூலம் புனித பூமிகளாக பிரகடனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	திட்டமிடப்பட்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.	இப்பணியை இத்திணைக்களம் மேற்கொள்கின்ற போதிலும், இது தொல்பொருளியல் , நிலஅளவையாளர், பிரதேச செயலகம் உட்பட பல்வேறு நிறுவனங்கள் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டியதாகும். காணியின் உரித்து பற்றிய சிக்கல்களும் காணப்படுகின்றன.
(உ)	திணைக்களம் தேசிய பௌதீக திட்டத்தை தயார் செய்தல் மற்றும் அதற்குத் தேவையான திருத்தங்களை காலத்திற்குக் காலம் மேற்கொள்வதற்கும், பிராந்திய மற்றும் நகரப் பௌதீக திட்டங்களை தயார் செய்வதையும் மேற்கொள்ளல் வேண்டும். இதற்கு நாட்டின்	நிபுணத்துவ அறிவைக் கொண்ட பதவியணி மற்றும் கல்விமான்களை உள்ளடக்கிய குழுவினூடாக	தேசிய பௌதீக திட்டம் 2019 ஆம் ஆண்டு தயார் செய்யப்பட்டு திருத்தம் செய்யப்பட்டு

	பல்வேறு துறைகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற கல்விமான்களை உள்ளடக்கிய குழு மற்றும் போதியளவிலான திட்டமிடல் கலைஞர்களை உள்ளடக்கிய பதவியணி காணப்படல் வேண்டும். எனினும் திணைக்களத்தில் அப்பதவிகளுக்கு நிபுணத்துவ அறிவைக் கொண்ட அலுவலர்கள் போதியளவில் இல்லாமையும் தேசிய பௌதீக திட்டங்களை தாபிக்க மற்றும் அமுல்படுத்துவதற்கு ஏனைய அரச நிறுவனங்களின் நிபுணர் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளவும் ஏற்றவாறு 1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம், 2000 இன் 49 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் திருத்தச் சட்டம் மூலம் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் திணைக்களம் தாபிக்கப்பட்டு 11 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் எடுத்துள்ள போதும் தேசிய பௌதீக திட்டங்களை தயார் செய்தல் மற்றும் ஏனைய பிராந்திய மற்றும் நகரத் திட்டங்களை காலத்திற்கு ஏற்றவாறு தயார் செய்து அமுல்படுத்த முடியாது போயுள்ளது.	பௌதீக திட்டங்களை தயார் செய்தல் மற்றும் திருத்தங்களை காலத்திற்குக் காலம் மேற்கொள்ளல் வேண்டும்.	இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது.
3.3	**பெறுகை** பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
(அ)	2023 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த செலவினங்களை விடவும் ரூபா 2,362,923 ஆன தொகை மேலதிகமாக செலவிடப்பட்டுள்ள 05 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிப்புச் செய்யப்பட்டது.	பெறுகைத் திட்டத்தை சரியாக தயார் செய்தல் வேண்டும்.	திட்டமிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான மதிப்பீடு பெறுகைத் திட்டத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்டத்தின் மூலும் பெற்ற ஒட்டுமொத்த ஏற்பாடுகளும் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ)	பெறுகை செயன்முறையை மென்மேலும் முறையாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் பேணிவருவதற்காக 2019 டிசம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய இலத்திரனியல் அரச பெறுகை முறைமை தாபிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு பெறுகை நிறுவனங்களை பதிவு செய்தல், ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை பதிவு செய்தல், விற்பனையாளர்களை பதிவு செய்தல், வருடாந்த பெறுகை திட்டம், பெறுகை அறிவித்தலை பிரகடனம் செய்தல், சந்தை கொள்வனவு முறையை இலத்திரனியல் பெறுகை முறைமையைப் பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வு ஆண்டில் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	எதிர்காலத்தில் பெறுகை அறிவித்தல் வெளியிடப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் promise.lk இணையத்தளம் ஊடாக மேற்கொள்ளப்படும்.

3.4	**சொத்து முகாமைத்துவம்** பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய கொம்ப்ட்டோரலர் ஜெனரலின் நிதி அல்லாத சொத்துக்களை விலைமதிப்புச் செய்யும் வழிகாட்டல்களுக்கு அமைய ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு தடவை கட்டிடங்கள் மற்றும் பொறி, உபகரணங்களை விலைமதிப்புச் செய்ய வேண்டுமாயினும், திணைக்களத்தின் 04 கட்டிடங்கள் அவ்வாறு விலை மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை	நிதி அல்லாத சொத்துக்களை விலைமதிப்புச் செய்யும் வழிகாட்டல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	உரிமையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு காணப்படுகின்ற காணிகளுக்கு மாத்திரம் விலைமதிப்புப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.
(ஆ)	குண்டசாலை பிரதேச செயலாளரினால் திணைக்களத்தின் உபயோகத்திற்கென வழங்கப்பட்டிருந்த விலைமதிப்புப் பெறுமதி ரூபா 5,000,000 ஆன 0.0506 ஹெக்டயர் அளவான காணி எந்தவொரு அபிவிருத்திப் பணிக்கும் பயன்படுத்தப்படாது 13 வருட காலமாக செயற்படாது காணப்பட்டது.	அபிவிருத்தி நடவடிக்கைக்குப் பயன்படுத்தல் வேண்டும்.	அபிவிருத்தி நடவடிக்கைகக்கு அரச சுற்றறிக்கைகள் தொடர்பிலான அங்கீகாரம் கிடைத்த பின்னர் மேற்கொள்ளப்பட

			முடியும்.
(இ)	திறைசேரி செயலாளரின் 2020 அக்டோபர் மாதம் 02 ஆம் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு அமைய உபயோக நிலையில் இல்லாத வாகனங்களை அகற்றல் அல்லது புதுப்பித்து உபயோகிக்க துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனினும், திணைக்களத்திற்கு உரித்தான ரூபா 7,500,000 பெறுமதிமிக்க உபயோக நிலையில் இல்லாத 5 வாகனங்கள் பயன்படுத்தப்படாது செயலிழந்ததாக திணைக்கள வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.	சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	இந்த வாகனங்களில் 2 இற்கு 2024 இல் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
3.5	**சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
	திணைக்களத்தின் சகல பிரிவுகளிலும் ரூபா 1,685,579 பெறுமதிமிக்க கணினி அச்சு இயந்திரங்கள், பிரதிபண்ணி இயந்திரங்கள் மற்றும் புளுபிரின்ட் இயந்திரங்கள் உட்பட 55 இயந்திரங்கள் காணப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அச்சு செலவினமாக வெளி நிறுவனங்களுக்கு ரூபா 1,441,060 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளமை.	திணைக்களத்திற்கு உரித்தான வளங்களை உச்சளவில் பயன்படுத்தல் வேண்டும்.	இந்தத் திணைக்களத்திற்கு உரித்தானதாக வர்ணப் புகைப்பட இயந்திரம் ஒன்று காணப்பட்ட போதிலும், அதில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அதனூடாக பெற்றுக் கொள்ளும் பிரதிகள் குறைபாடுகள் உள்ளதாக இருந்தன.
4.	**நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்.** பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
	தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 02/2017 சுற்றறிக்கைக்கு அமைய முடிவுச் சுட்டிகளை இனங்காணல், பிரதான செயல் சுட்டிகளை பிரகடனம் செய்தல், நிறுவத்தின் செயற்பணியுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை இனங்காணல்,	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு சுற்றறிக்கைக்	தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்துக்கு உரித்தான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், மேற்படி நோக்கங்களுடன்

	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பிலான அலுவலர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	சம்பந்தப்பட்ட தரப்பினர்களை இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
5.	**நல்லாட்சி**		
5.1	**உள்ளகக் கணக்காய்வு** பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
	நி.பி. 133 (2) (அ) VI பிரிவுக்கு அமைய செலவினங்களை தடுப்பதற்கு மற்றும் உள்ளகக் கணக்காய்வின் வெற்றிகரமான தன்மை பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டுமாயினும், திணைக்களத்தின் ஒட்டுமொத்த வளவும் வளிச்சீராக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், 2 வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புச் செய்யப்படாத அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பகுதிகளில் பாரிய வளிச்சீராக்கி இயந்திரங்கள் 16 பொருத்தப்பட்டுள்ளமை சிக்கனமற்ற செலவினம் என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது. மேலும் 80W மின்குமிழ்கள் (ரியுப் லையிட்) பெரும் எண்ணிக்கையில் பகல் நேரத்தில் இயங்கி வருவதுடன், அதற்கு எல்ஈடி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்த போதும் அது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	செலவினங்களை தடுப்பதற்கு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டின் வெற்றிகரமான தன்மையை ஆராய்வதை உள்ளகக் கணக்காய்வாளர் மேற்கொள்ளல் வேண்டும்.	நி.பி. 133 (2) (அ) VI பிரிவுக்கு அமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில், நிறுவனத்தின் அலுவலர்களின் கூட்டங்களில், செலவினக் கட்டுப்பாடு மற்றும் விரயம் தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
6.	**மனித வள முகாமைத்துவம்** பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.		
	கணக்காய்வு அவதானிப்பு	**சிபாரிசு**	**கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை**
(அ)	திணைக்களத்தின் திட்டமிடல் பொறுப்பாளராக ஒரு அலுவலர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என்பதுடன், அதற்காக 2023 ஆம் ஆண்டில் சம்பளமாக ரூபா 493,746	பதவிகள் தொடர்பில் அலுவலர்களுக்கு வேறு செயற்பணிகள்	திட்டமிடல் களஞ்சியப் பிரிவின் பொறுப்பாளராக கடமையாற்றி வருகின்ற அலுவலருக்கு சுமார் 30 வருட காலமாக

	செலுத்தப்பட்டிருந்த போதும் திணைக்களத்தின் திட்டமிடல் அச்சுப் பிரிவின் வரைபடங்கள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் முறையாக ஆவணமயப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. மேலும் உபயோகத்திலிருந்து நீக்கப்பட்ட வரைபடங்கள் பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டதுடன், அவற்றுக்கு உகந்த நடவடிக்கை மேற்கொள்ள செயற்பட்டிருக்கவில்லை. மேலும் திட்டமிடல் பிரிவின் களஞ்சியத்தில் ஆவணங்களுக்கான ஆவணப் பேணல் முறையியல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.	பொறுப்பளித்தல் வேண்டும்.	சேகரிக்கப்பட்ட சுமார் 5000 திட்டங்களை மீண்டும் ஆவணமயப்படுத்தி களஞ்சியத்தை இற்றைப்படுத்த வேண்டியுள்ளது. தற்போது காணப்படுகின்ற ஆவணங்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்த களஞ்சியத்தில் வசதி உள்ளதுடன், இந்த ஆவணங்கள் பாதுகாப்பாகக் காணப்படுகின்றன.
(ஆ)	திட்டமிடல் பிரிவின் பழைய வரைபடங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு திட்டமிடல் புதுப்பிப்பவர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என்பதுடன், மீளாய்வு ஆண்டில் சம்பளமாக ரூபா 587,400 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளது.	திணைக்களத்திற்கு விளைதிறன்மிக்க தகுந்த பதவிகளுக்கு அங்கீகாரங்களைப் பெற்றுக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளல் வேண்டும்.	பழைய வரைபடங்களில் மீண்டும் பயன்படுத்தப்படுவது சுமார் 1 சதவீதம் மாத்திரமாகும். தற்போது அமுலில் உள்ள கருத்திட்டங்க்ளின் திட்டங்களது டிரேசின் மூலப் பிரதிகளை பெற்றுக் கொள்வதை மேற்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், அதன் மென் பிரதியை மாத்திரம் பேணப்பட்டு பேணிவரப்படுகின்றது.
(இ)	திணைக்களத்தின் திட்டமிடல் பிரிவில் திட்டங்களை அச்சிடுவதற்கு அலுவலர்கள் 02 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள் என்பதுடன், 2023 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் வேதனமாக ரூபா 986,995 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ள போதிலும் திட்டங்களை அச்சிடுவதை இவர்கள் மேற்கொண்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்கு விளைதிறன்மிக்க தகுந்த பதவிகளுக்கு அங்கீகாரங்களைப் பெற்றுக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளல் வேண்டும்.	பழைய திட்டங்களை முறைப்படுத்தும் பணியை துரிதப்படுத்துவதற்கு திட்டங்களை அச்சிடும் பிரிவின் அலுவலர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என்பதுடன், இதன் முன்னேற்றத்தை மாதாந்தம் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ)	திணைக்களத்தின் பொலன்னறுவை புலதிசிபுர சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் ஆவணங்களை போலியாக தயார் செய்து 2020 ஆம் ஆண்டு நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார். இது பற்றிய முறையான விசாரணையை மேற்கொண்டு உரிய நிதியை அரசுக்கு அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அறவிடப்பட வேண்டிய நிதியை துரிதமாக அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	தவறான செயல் தொடர்பான ஆரம்ப விசாரணை நிறைவு செய்யப்பட்டு குற்றப்பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி குற்றப்பத்திரத்திற்கு அமைய திணைக்களம் அவரின் சேவையை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.
(உ)	2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 291 பேர் ஆவார்கள் என்பதுடன், உண்மையாக இருந்த பதவியணி எண்ணிக்கை 165 ஆகும் என்பதனால் 126 வெற்றிடங்கள் காணப்பட்டன. திணைக்களம் உரிய காலப்பகுதிக்குள் மேற்கொள்ள வேண்டியிருந்த பௌதீக திட்டங்களை தயார் செய்ய முடியாது போனதில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.	திணைக்களத்தின் செயற்பணியை நிறைவேற்றுவதற்கு போதியவிளான பதவியணியை பேணிவருதல் வேண்டும்.	பௌதீக திட்டங்களை தயார் செய்வது தொடர்பாக உதவிப் பணிப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள் பிரதம அமைச்சர் உள்ளிட்டக குழுவினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கையொப்பம் / ஈ.கே.கே.எஸ். எதிரிசிங்க

சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக.

04 அத்தியாயம் - செயலாற்றுகைக் சுட்டி

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

விசேட சுட்டிகள்	உத்தேச பூர்த்தி செய்தலின் விகிதமாக (%) உண்மையாக பூர்த்தி செய்தது		
	100% - 90%	75% - 89%	50% - 74%
1. இற்றைப்படுத்தப்பட்ட தேசிய பௌதீக திட்டம் மற்றும் கொள்கை	√		
2. தயார் செய்யப்பட்ட வலய திட்டம்			√
3. பிரதேச சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள நகர்ப்புறப் பிரதேசங்களை இனங்கால்	√		
4. வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்ட புனிதபூமிகள்			√
5. புனித பூமிகளுக்கு தயார் செய்யப்பட்ட உருவரை வரைபடங்கள்			√
6. ஏனைய நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் கருத்திட்டங்களுக்கு கட்டிடக்கலை வரைபடம், கட்டமைப்புசார் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன.	√		

05 அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை

5.1 இனங்காணப்பட்ட ஏற்புடையதான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக.

இலக்கு/ நோக்கம்	இலக்கு	வெற்றிச் சுட்டிகள்	இதுவரை வெற்றிபெற்றுக் கொள்வதன் முன்னேற்றம்		
			0% -49%	50% - 74%	75% - 100%
குறிக்கோள் இலக்கம் 11 இன் அம்சங்கள் முழுமையான பாதுகாப்பான, பலம்மிக்க மற்றும் நிலைபேறான நகரங்களை ற்படுத்தல்	உலகில் கலாசார மற்றும் இயற்கை மரபுரிமைகளை பேணல் மற்றும் பாதுகாப்பதற்கான முயற்சிகளை வலுவூட்டல்	உலகில் கலாசார மற்றும் இயற்கை மரபுரிமைகளை பேணல் மற்றும் பாதுகாப்பதற்கான முயற்சிகளை வலுவூட்டுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை			√
	தேசிய மற்றும் வலய அபிவிருத்தி திட்டமிடலை வலுவூட்டுவதன் மூலம் நகர, பகுதியளவிலான நகர மற்றும் கிராமிய பிரதேசங்களுக்கு இடையே பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் துறைகளின் தொடர்புகளுக்கு உதவுதல்	வலய மற்றும் பிரதேச அபிவிருத்திக்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை		√	

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்களை விரிவாக விபரிக்குக.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் தயார் செய்யப்பட்டுள்ள நிலைபேறான குறிக்கோள்களில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு ஏற்புடையதாகின்ற குறிக்கோளாக உள்ள 11 ஆவது குறிக்கோளின் அம்சங்களை முழுமையாக பாதுகாப்பான, பலம்மிக்க மற்றும் நிலைபேறான நகரங்களை ஏற்படுத்தல். மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் சுட்டிகள் இனங்காணப்பட்டுள்ளன. மேற்படி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக வலய மற்றும் பிரதேச திட்டங்களை தயார் செய்தல் வேண்டும். இந்த அறிக்கையின் 2 ஆம் அத்தியாயத்தில் 2023 ஆம் ஆண்டில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தில் காணப்பட்ட சவால்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதான சவாலாகக் காணப்பட்டது திட்டமிடல் தொடர்பில் காணப்படுகின்ற பதவிகள் வெற்றிடமாக உள்ளமையாகும்.

06. அத்தியாயம் - மனிதவளத் தோற்றப்பாடு

06.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடம் / (மிகை)
சிரேஷ்ட	51	13	38
மூன்றாம் நிலை	08	03	05
இரண்டாம் நிலை	115	56	59
ஆரம்ப	117	93	24

06.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியிருப்பது எவ்வாறு என்பதைக் குறிப்பிடுக.

ஆரம்ப, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் சிரேஷ்ட எனும் சகல மட்டங்களையும் கவனத்தில் கொள்ளும் போது தற்போது இருப்பது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 60% இற்கும் குறைவான எண்ணிக்கையானோர் ஆவார்கள். 2023 ஆம் ஆண்டுக்கு ஆக்கப்பட்ட செயற்றிட்டத்திற்கு அமைய வலய பௌதீக திட்டங்கள் 02 இன் வேலைகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மனிதவளப் பற்றாக்குறை காரணமாக மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை.

06.3 மனிதவள அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டத்தின் காலஎல்லை	ஒட்டுமொத்த முதலீடு (ரூ.) உள்நாடு	நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாடு /வெளிநாடு)	பூர்த்தி / பெற்றுக் கொண்ட அறிவு*
உரிமப்பத்திரம் பெற்ற கட்டிடக்கலை பாடநெறி	01	ஒரு வருடம்	100,000.00	உள்நாடு	அலுவலக நடவடிக்கைகளுக்கு தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளல்
பட்டயம் பெற்ற நகர வடிவமைப்பாளர் பரீட்சைக்கான பாடநெறி	01	ஒரு வருடம்	70,000.00	உள்நாடு	
தலைமைத்துவ திறன் மற்றும் ஆளுமை அபிவிருத்தி	சகல அலுவலர்களும்	06 மணித்தியாலம்	33,979.00	உள்நாடு	
கணக்கீட்டு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சிச் செயலமர்வு	சகல அலுவலர்களும்	03 மணித்தியாலம்	16,058.00	உள்நாடு	
பெறுகை	01	ஒரு வருடம்	40,000.00	உள்நாடு	

செயன்முறை பற்றிய சான்றிதழ் பாடநெறி					
அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயார் செய்தல்	01	ஒரு நாள்	9,500.00	உள்நாடு	
தமிழ் மொழிப் பாடநெறி	15	150 மணித்தியாலம்	15,340.95	உள்நாடு	
புதிய கணக்காய்வு சட்டம் மற்றும் சிக்கல்கள்	01	ஒரு நாள்	6,000.00	உள்நாடு	
விஞ்ஞான முறையில் மற்றும் பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல்	05	ஒரு நாள்	25,000.00	உள்நாடு	
Interactive short training course on EIA	02	05 நாள்	50,000.00	உள்நாடு	
நடவடிக்கைமுறை விதிகள் பற்றிய செயலமர்வு	சகல அலுவலர்களும்	03 மணித்தியாலம்	33,200.00	உள்நாடு	
வருடாந்த இருப்புக் கணிப்பீடு பற்றிய பயிற்சி	07	ஒரு நாள்	70,000.00	உள்நாடு	
உள்ளூராட்சி சட்டம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு	30	30 மணித்தியாலம்	90,374.00	உள்நாடு	
பெறுகை செயன்முறை பற்றிய செயலமர்வு	சகல அலுவலர்களும்	03 மணித்தியாலம்	18,050.00	உள்நாடு	
உள்ளகக் கணக்காய்வு மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பயிற்சி	01	ஒரு நாள்	9,500.00	உள்நாடு	
சிறந்த வேலைச் சூழலுக்காக அலுவலக சிற்றூழியர்களுக்கான பயிற்சி	09	ஒரு நாள்	45,000.00	உள்நாடு	
தாபன விதிக் கோவையின் ஒழுக்காற்று நடவடிக்கைமுறை பற்றிய செயலமர்வு	சகல அலுவலர்களும்	03 மணித்தியாலம்	18,250.00	உள்நாடு	
Green associate professional training program	01	06 மாதம்	40,000.00	உள்நாடு	

07 ஆம் அத்தியாயம் - இயைபு அறிக்கை

இலக்கம்	ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு	இயைபு நிலைமை (ஏற்புடையதாகின்றது /ஏற்புடையதாவதில்லை)	ஏற்புடையதாவதில்லை எனின் அதற்கான சுருக்கமான விளக்கம்	ஏற்புடையதாகாமையை எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்காக பிரேரிக்கும் சரியான தீர்மானம் நடவடிக்கை
1	**கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	ஏற்புடையதாகின்றது		
1.2	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	ஏற்புடையதாகின்றது		
1.3	தொழில் மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு)		ஏற்புடையதல்ல	
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு		ஏற்புடையதல்ல	
1.5	விசேட முற்பணக் கணக்கு		ஏற்புடையதல்ல	
1.6	வேறு		ஏற்புடையதல்ல	
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவருதல் (நி.பி. 445)**			
2.1	பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.2	ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு / ஆட்களின் சம்பள அட்டைகளை பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.3	கணக்காய்வு வினாக்களுக்கான பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.5	சகல மாதாந்த கணக்குப் பொழிப்பு அறிக்கைகளையும் தயார் செய்து பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.7	பொருட் பதிவேட்டை	ஏற்புடையதாகின்றது		

	இற்றைப்படுத்தி பேணிவருதல்			
2.8	இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.9	நட்டம் இழப்பு பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.10	பொறுப்புகள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.11	உபஆவணப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் (புயு-50)	ஏற்புடையதாகின்றது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகள் பகிரப்பட்டிருத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
3.2	நிதி அதிகாரத்தை பொறுப்பளிப்பது பற்றி நிறுவனத்திற்குள் விழிப்புணர்வூட்டியிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் அலுவலர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் ஊடாக அங்கீகரிக்கப்படக் கூடியவாறு அதிகாரம் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பள ஆவண மென்பொருள் பொதி (பெகேஜ்) யை பயன்படுத்தும் போது கணக்காளரின் நிருவாகத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
4	**வருடாந்த திட்டங்களைத் தயார் செய்தல்**			
4.1	வருடாந்த செயற்றிட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதாகின்றது		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயார்	ஏற்புடையதாகின்றது		

	செய்தல்			
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதாகின்றது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயார் செய்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடம் உரிய திகதியில் சமர்ப்பித்தல்	ஏற்புடையதாகின்றது		
4.5	வருடாந்த காசோட்டக் கூற்றை உரிய திகதியில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதியில், சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி. 134(2) DMA/1-2019 இற்கமைய, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதாகின்றது		
6.2	ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் விடையளித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
6.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உட்பிரிவுக்கு அமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இற்கமைய, சகல	ஏற்புடையதாகின்றது		

	உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்			
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA சுற்றறிக்கை 1-2019 இற்கமைய, ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 உரிய ஆண்டில் நடாத்தியிருத்தல்.			
8	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திடம் சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.2	மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைப்புக்கு பொருத்தமான ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமனம் செய்து மேற்படி அலுவலர் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.3	அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இற்கமைய பொருட் கணிப்பீட்டை நடாத்தி குறித்த அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		

8.4	வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறை மற்றும் வேறு சிபாரிசுகளை சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொண்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.5	சேதமடைந்த பொருட்களை அகற்றுவதை நி.பி. 772 இற்கமைய மேற்கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கு நாளாந்த பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயார் செய்து உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல்	ஏற்புடையதாகின்றது		
9.2	வாகனங்கள் சேதமடைந்து 6 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றியிருத்தல்	ஏற்புடையதாக இல்லை	வாகனம் அகற்றல் குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.	
9.3	வாகன லொக் புத்தகங்களைப் பேணிவருவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
9.4	ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் நி.பி. 103,104,109, மற்றும் 110 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பற்றி மீள் பரிசீலனை செய்தல்	ஏற்புடையதாகின்றது		உபயோக மட்டத்திலுள்ள வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
9.6	லீசின் கொள்வனவுக் கால எல்லையின் பின்னர், லீசின்	ஏற்புடையதாகின்றது		

	கொள்வனவு வாகனங்கள் லொக் புத்தகங்களில் முழு உரித்தையும் சாட்டுதல் செய்திருத்தல்			
10	**வங்கிக் கணக்கு முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
10.2	மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ள செயற்படாத வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தல்		ஏற்புடையதாவதில்லை	
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற மற்றும் சீராக்கல் செய்ய வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி நிலுவைகளை ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்த்திருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
11	**ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை தாண்டாதவாறு செலவிடல்	ஏற்புடையதாகின்றது		
11.2	நி.பி. 94(1) இற்கமைய செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஏற்பாடுகளை வரையறைகளைத் தாண்டாதவாறு பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	வரையறைகளுக்கு ஏற்புடையதாதல்	ஏற்புடையதாகின்றது		
12.2	நிலுவையாக உள்ள கடன் நிலுவைகள் பற்றிய காலப்	ஏற்புடையதாகின்றது		

	பகுப்பாய்வை மேற்கொள்ளல்			
12.3	ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவையாக உள்ள கடன் நிலுவைகளைத் தீர்த்திருத்தல்	ஏற்புடையதாவதில்லை	எதிர்காலத்தில் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பூர்த்தியடைந்த வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
14.2	நி.பி. 371 இற்கமைய வழங்கப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி, மேற்படி பணி நிறைவு செய்யப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
14.3	நி.பி. 371 இற்கமைய அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளைத் தாண்டாதவாறு குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
14.4	கட்டுநிதிக் கணக்கின் மீதி, திறைசேரியின் பதிவேடுகளுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல்.	ஏற்புடையதாகின்றது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	குறித்த ஒழுங்குவிதிகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளச் செலுத்தல்கள் செலுத்தப்பட்டிருத்தல்		ஏற்புடையதாவதில்லை	
15.2	சேகரிக்கப்பட்ட வருமானங்கள், வைப்புக் கணக்கில்	ஏற்புடையதாகின்றது		

	செலவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு செலவு வைத்திருத்தல்			
15.3	நி.பி. 176 இற்கமைய நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமா்ப்பிக்கப்பட்டிருத்தல்		ஏற்புடையதாவதில்லை	
16	**மனிதவள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியை பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
16.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
16.3	20.09.2017 ஆம் திகதிய ஆளுனு சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கமைய சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமா்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
17	**பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்**			
17.1	தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலா் ஒருவரை நியமனம் செய்து தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்.	ஏற்புடையதாகின்றது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இணையத்தளம் அல்லது மாற்றுவழிமுறைகள் ஊடாக நிறுவனம் பற்றி பொது மக்களின் பாராட்டுக்கள் / பிரேரணைகளை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருத்தல்.	ஏற்புடையதாகின்றது		

17.3	தகவல் அறியும் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு அமைய ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவை அல்லது ஒரு வருடத்தில் ஒரு தடவை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
18	**பிரசைகள் பிரகடனத்தை அமுல்படுத்தல்**			
18.1	05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2008(1) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள் / சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்து அமுல்படுத்தியிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
18.2	மேற்படி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு அமைய, பிரசைகள் /சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல், மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தினால் முறையியல் ஒன்று தயார் செய்யப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
19	**மனிதவள திட்டத்தை தயார் செய்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 இன் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் மனிதவளத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளமை	ஏற்புடையதாகின்றது		
19.2	பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணி நேரத்திற்குக் குறையாத	ஏற்புடையதாகின்றது		

	பயிற்சி வாய்ப்பை மேற்படி மனிதவளத் திட்டத்தில் உறுதி செய்திருத்தல்			
19.3	மேலுள்ள சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
19.4	மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனிதவள அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
20	**கணக்காய்வு பந்திகள் தொடர்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்**			
20.1	கடந்த ஆண்டுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கல் செய்யப்பட்டுள்ளமை.	ஏற்புடையதாகின்றது		